## சென்னைக்கு வயது 387! கடந்த 60 ஆண்டுகாலச்

# சென்னை வரலாற்றை ரசித்து செதுக்கியவர்கள் நாங்கள்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஆக. 23 -

சென்னை நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இருப்போர், இலார் என எல்லோரையும் அரவணைத்து ஏற்றம் தரும் அன்னையான சென்னைக்கு வயது 387!

101 அடி பாலத்தின் மேல் நின்று குனிந்து பார்த்தாலும், விமானத்தில் அமர்ந்துகொண்டு எட்டிப் பார்த்தாலும், தரையில் இருந்து பார்த்தாலும், சாலைக்கு அடியில் ஓடும் வடிகால்களைப் பார்த்தாலும் சென்னையில் எங்கும் எங்கெங்கும் தி.மு.க.வின் சாதனைகள் இருக்கும்; தி.மு.க.வின் சாதனைகள் மட்டும்தான் இருக்கும்!




மேம்பாலங்கள், கோட்டங்கள், பூங்காக்கள், நவீன பேருந்து முனையங்கள், மெட்ரோ இரயில், IT Park, FinTech Tower, வானுயர்ந்து நிற்கும் மருத்துவமனை நூலகக் கட்டடங்கள் எனக் கடந்த 60 ஆண்டுகாலச் சென்னை வரலாற்றை இரசித்து இரசித்துச் செதுக்கியவர்கள் நாங்கள்.

சட்டமன்ற உறுப்பினராக, மாநகரத் தந்தையாக, துணை முதலமைச்சராக, முதலமைச்சராக என அத்தனை நிலைகளிலும் சென்னையை வளர்த்தெடுத்தவன் என்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்!

தருமமிகு அன்புமிகு சென்னை வாழ்க!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

# நல்லதைப் பாராட்டும் நல்லவர்!





முன்னாள் முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களை
நட்பின் நிமித்தமாய்
நலம்கேட்கச் சென்றேன்;
பொன்னாடை அணிவித்தேன்

ஞானபீடத்தின் பெருமையறிந்து
வீட்டுக்கே வந்து வாழ்த்திய
அந்நாள் முதலமைச்சர்,
பெற்றுவந்த விருதுக்காக
மீண்டுமொரு
பொன்னாடை அணிவித்தார்

பொன்னாடைக்குப்
பொன்னாடை

“எதைக் கொடுக்கிறாயோ
அதையே பெறுவாய்”
என்ற முதுமொழி
என் மூளைக்குள் ஓடியது

ஒருவரை ஒருவர்
கொண்டாடிக் கொண்டோம்

சட்டமன்ற நேரடி ஒளிபரப்பை
முக்கால் மணிநேரம்
இருவரும் கண்டுகொண்டிருந்தோம்

“ஜே.சி.டி. பிரபாகர்
சிறப்பாக நடத்துகிறார்
சட்டமன்றத்தை” என்றார்
தி.மு.க. தலைவர்

“சட்டமன்றத்தின்
ஆட்ட நாயகன்” என்று
சமூக ஊடகங்கள்
சபாநாயகரைப் பேசுகின்றன
என்றேன்

“அப்படியா” என்றார்

ஓர் அழகான காஃபி
குடித்து முடித்து
வாழ்த்தி விடைகொண்டேன் !

— கவிப்பேரரசு வைரமுத்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இயக்குநர் அமிர்தம் இல்லத் திருமணம்!

## உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

**சென்னை, ஆக. 23-**

**இயக்குநர் அமிர்தம் அவர்கள் இல்லத் திருமணவிழா, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் - கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நாளை (ஆக.24 - திங்கள் கிழமை) நடை பெறுகிறது.**

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு :-

இயக்குநர் அமிர்தம் - திருமதி வசந்தா ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், (நினைவில் வாழும்) பெ.பெரியசாமி - மாசிலாமணி ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், டாக்டர் பெ. சதீஸ் குமார் - டாக்டர் ச.கலைச்செல்வி ஆகியோரின் புதல்வியு மான டாக்டர் ச.இலக்கியாவிற்கும் - கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், (நினைவில் வாழும்) கு.கோபால ரெட்டி - கோ.நஞ்சம்மா ஆகியோரின் மகன் வழிப் பேரனும் ஒசூர் கே. கும்மிரெட்டி - எஸ். ரூபா ஆகியோரின் புதல்வருமான டாக்டர் கு.கிரிதராவிற்கும் திருமணம் நாளை (24.08.2026 - திங்கள்கிழமை) காலை 9.15 மணியளவில் சென்னை - திருவான்மியூர் - ‘ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டர்’ திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று - திருமணத்தை நடத்திவைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

இயக்குநர் அமிர்தம் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

முன்னதாக - மணவிழா வரவேற்பு இன்று (23.08.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணியளவில் நடைபெறு கிறது.

இம்மணவிழாவில் கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்ற னர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை அ. குணாநிதி அமிர்தம், கு.ஹேமமாலின் குணாநிதி, கு.சூர்யா குணாநிதி, கு.ஸ்ரேயா குணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

# சட்டப்பேரவை நடக்கும் நேரத்தில் தூங்கி வழிகிறதா போலீஸ்?

## சென்னையில் 4 பேர் படுகொலை! பீதியில் மாநகர மக்கள்!

சென்னை, ஆக. 23 -

சென்னை அருகே திருவேற்காட்டில் நகைக்காக சென்னை மாநகராட்சி பெண் தூய்மைப்பணியாளர், கேளம்பாக்கத்தில் காதல் விவகாரத்தில் வாலிபர், கூடுவாஞ்சேரியில் ஒடிசா பெண், குன்றத்தூர் அருகே முன்விரோதத்தில் ஆட்டோ டிரைவர் என 4 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது, பொது மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது. சட்டப்பேரவை நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் தலைநகரில் இப்படி அடுத்தடுத்து படுகொலைகள் நடப்பதை கண்டுகொள்ளாமல் காவல்துறை தூங்கிக்கொண்டிருக்கிறதா என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

திருவேற்காடு, அன்ன லட்சுமி நகர் பகுதியில் வசித்து வந்தவர் ஹேமாவதி (55). இவர் சென்னை மாநகராட்சி வளசரவாக்கத்தில் தூய்மைப்பணியாளராக பணிபுரிந்து வந்தார். இவரது கணவர் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டதால் தனியாக வசித்து வந்தார். இந்நிலையில், கடந்த இரண்டு தினங்களாக இவர் வீட்டில் இருந்து வெளியே வராத நிலையில் நேற்று வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் திருவேற்காடு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் வீட்டை திறந்து உள்ளே சென்ற போது ஹேமாவதி உடல் அழுகிய நிலையில் இறந்து கிடந்தார். ஹேமாவதி முகத்தில் தலையணையால் அழுத்தி கொலை செய்யப்பட்டிருப்பதை கண்டு போலீசார் அதிர்ச்சி அடைந்தனர்.

ஆட்டோ டிரைவர்: திருமுடிவாக்கம் போலீசார் நேற்று காலை ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, சந்தேகப்படும்படி வந்த ஆட்டோவை மடக்கி சோதனை செய்தபோது, ஆட்டோ முழுவதும் ரத்தக்கறைகள் இருந்ததால், ஆட்டோவில் பயணம் செய்த 3 பேரிடம் போலீசார் துருவித்துருவி விசாரித்தனர். அப்போது, அவர்கள் கையில் அடிபட்டதால் ரத்தம் ஊற்றியதாக தெரிவித்தனர். இருப்பினும் போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டு, 3 பேரையும் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரித்த போது, நண்பர் ஒருவரை அடித்து கொலை செய்ததாக கூறினர்.

ஒடிசா பெண்: கடந்த 5ம் தேதி சென்னை சென்ட்ரலில் இருந்து டெல்லியை நோக்கி சென்ற தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் ஆக்ரா ரயில் நிலையத்தை நெருங்கும்போது முன்பதிவு செய்யப்படாத ரயில் பெட்டியில் இருந்து கடும் துர்நாற்றம் வீசியது. இது குறித்து பயணிகள் ஆக்ரா ரயில்வே போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். அதன்பேரில் ரயில்வே போலீசார் ரயில் பெட்டிகளில் சோதனை செய்தனர். அப்போது சிவப்பு நிற டிராலி சூட்கேஸ் ஒன்று கேட்பாரற்று கிடந்தது.

அதனை மீட்ட ரயில்வே போலீசார் திறந்து பார்த்த போது தலை மற்றும் கைகள் இல்லாமல் பெண்ணின் சடலம் துண்டு, துண்டாக வெட்டி சென்னையில் உள்ள பிரபல துணிக்கடையின் 2 கவரில் சுற்றி வைத்திருப்பதை கண்டு ரயில்வே போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். விசாரணையில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் மூக்கு கண்ணாடி போட்டிருந்த இளம் பெண்ணும், குறுந்தாடி வைத்திருந்த ஒரு இளைஞரும் சேர்ந்து சென்னை சென்ட்ரலில் இருந்து டெல்லி நோக்கி சென்ற தமிழ்நாடு எக்ஸ்பிரசில் அந்த சூட்கேஸை வைத்துவிட்டு தலைமறைவானது தெரிந்தது.

திருப்போரூர்: கேளம்பாக்கம் அடுத்த தையூர், சின்னமா நகர் பகுதியை சேர்ந்தவர் கருணாகரன். இவரது, மகன் பிரவீன்குமார் (23). தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இவர், கடந்த 16ம் தேதி இரவு தனது வீட்டின் அருகே நின்று செல்போனில் பேசிக்கொண்டு இருந்தார். அப்போது, ஒரு காரில் வந்த 3 பேர் பிரவீன்குமாரை சரமாரியாக அரிவாளால் வெட்டினர். மருத்துவனையில் சேர்க்கப்பட்ட வர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இதுகுறித்த விசாரணையில் பிரவீன்குமார் தையூர் கிராமத்தை சேர்ந்த ஏழுமலை என்பவரின் மகளை தீவிரமாக காதலித்து வந்ததாகவும், அது பிடிக்காத அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் இந்த செயலில் ஈடுபட்டதும் தெரிய வந்தது. இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த போலீசார், தையூர் கிராமத்தை சேர்ந்த ஏழுமலை (48), மணிகண்டன் (31), நந்தீஸ் (19) கவுதம் (20) ஆகிய 4 பேரை கைது செய்தனர்.

சட்டப்பேரவை நடந்து வருகிறது. இந்தநிலையில் சென்னை மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளில் 4 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. போலீசார் கடந்த சில மாதங்களாகவே சரியாக செயல்படவில்லை என்றும் போலீசார் மீதே பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனர். பல நேர்மையான அதிகாரிகள் வெளி மாவட்டங்களுக்கு தூக்கியடிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற காரணங்களால் போலீசார் மத்தியில் ஒரு வித சுணக்கம் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால்தான் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கொலைகள் அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இது பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

★ சட்டப்பேரவை நடந்து கொண்டிருக்கும் நிலையில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 4 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

★ போலீசார் மீதே பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. பல நேர்மையான அதிகாரிகள் வெளிமாவட்டங்களுக்கு தூக்கியடிக்கப்பட்டுள்ளனர்.

★ இதுபோன்ற காரணங்களால் போலீசார் மத்தியில் ஒரு வித சுணக்கம் இருப்பதாக கூறப்படுகிறது.

★ இதனால்தான் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கொலைகள் அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. மக்களிடம் இது பீதியை கிளப்பியுள்ளது.

## தாய்மாமன் தங்க மோதிர திட்டத்தில்

# தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் தங்கத்தை எப்படி கொள்முதல் செய்ய முடியும்?

## சட்டப் பேரவையில் மனோஜ் பாண்டியன் கேள்வி!

சென்னை. ஆக.23-

தமிழக சட்டப் பேரவையில் நேற்று சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சட்டத் துறைகள், மின்வாரியம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஆலங்குளம் தொகுதி உறுப்பினர் மனோஜ் பாண்டியன் (திமுக) பேசியதாவது: தாய்மாமன் சீர்’ திட்டத்தின் கீழ் தங்கம் கொள்முதல் செய்வதற்கான டெண்டர் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் கோரப்பட்டுள்ளது.



இந்த நிறுவனமானது மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கும், மருத்துவக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் மட்டுமே சட்டப்படி உருவாக்கப்பட்ட ஒரு கழகம். தங்கத்தை ‘மருத்துவ உபகரணம்’ என்று வகைப்படுத்தி டெண்டர் கோருவது இந்த நிறுவனத்தின் அடிப்படை நோக்கத்திற்கு எதிரானது மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு முரணானது.

இதற்கு பதிலளித்த அமைச்சர்: தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் முதல்வர் அறிவித்த பின்பு எந்த துறை மூலம் இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. மருத்துவத் துறையே இந்த திட்டத்தை அமல்படுத்தும். மேலும், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் தங்கத்தை கொள்முதல் செய்யும் ஏற்பாடுகளை செய்து வருகிறோம். தங்கத்தை வாங்குவதற்காக ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

## கார் விஷயத்தில் அதிக வேகம் காட்ட வேண்டிய அவசியமில்லை!

# மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற அக்கறை காட்டிடுக!

## அரசுக்கு – ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 23 -

கார் விஷயத்தில் காட்டும் வேகத்தை மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற காட்ட வேண்டும் என த.வெ.க. அரசுக்கு ‘தினகரன்’ நாளேடு - தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து 22.08.2026 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:


தினகரன்

ஆகஸ்ட் 22, 2026 சனிக்கிழமை

ஏனிந்த விரயம்?

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து வெளியிடப்படும் பல அறிவிப்புகள் பெரும் விவாதத்தையும், சர்ச்சையையும் கிளப்பி வருகின்றன. நிதி பற்றாக்குறை, அரசின் கடன் சுமையால் தங்களது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளதை உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை என முதல்வர் விஜய் முதல் நிதியமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இந்த சூழலில், அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் புதிய கார், மாத பராமரிப்புக்கு ரூ.75 ஆயிரம் என தமிழக அரசின் அறிவிப்புக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

விவசாயிகள் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல கோரிக்கைகளில் போதிய ஆர்வம் காட்டாமல் உள்ள த.வெ.க. அரசு, தற்போது எந்த எம்.எல்.ஏ.வுமே கோராத கார் தருவதாக அறிவித்தது சட்டப்பேரவையில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

கார் அறிவிப்பு என்பதனாலோ என்னவோ, உடனே வரிசை கட்டி சொகுசு கார்கள் ஆய்வுக்கு ...

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து வெளியிடப்படும் பல அறிவிப்புகள் பெரும் விவாதத்தையும், சர்ச்சையையும் கிளப்பி வருகின்றன. நிதி பற்றாக்குறை, அரசின் கடன் சுமையால் தங்களது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளதை உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை என முதல்வர் விஜய் முதல் நிதியமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இந்த சூழலில், அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் புதிய கார், மாத பராமரிப்புக்கு ரூ.75 ஆயிரம் என தமிழக அரசின் அறிவிப்புக்கு எதிர்ப்புகள் கிளம்பி யுள்ளன.

விவசாயிகள் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல கோரிக்கைகளில் போதிய ஆர்வம் காட்டாமல் உள்ள த.வெ.க. அரசு, தற்போது எந்த எம்.எல்.ஏ.வுமே கோராத கார் தருவதாக அறிவித்தது சட்டப்பேரவையில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. கார் அறிவிப்பு என்பதனாலோ என்னவோ, உடனே வரிசை கட்டி சொகுசு கார்கள் ஆய்வுக்கு வரத் தொடங்கி விட்டன.

இங்கே நாம் ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். ஒரு கார் மதிப்பீடாக ரூ.30 லட்சம் முதல் 35 லட்சம் வரை என கணக்கிட்டால், அதற்கே அரசுக்கு ரூ.70 கோடிக்கு மேல் தேவைப்படும். இதுபோக கார் பராமரிப்பு ரூ.75 ஆயிரம் என கணக்கிடும்போது, அதற்கே ஆண்டுக்கு சுமார் ரூ.21 கோடி தேவைப்படும். 5 ஆண்டுகள் கணக்கிட்டால் சுமார் ரூ.105 கோடி தேவை. தொடர்ந்து நடக்கும் பேரவையில் பல்வேறு முக்கிய விவாதங்கள் நடக்கும்போது, நிதிச்சுமையை காரணமாக கூறி மறுக்கும் அரசு, கார் விஷயத்தில் அதிவேகம் காட்ட வேண்டிய அவசியம் புரியவில்லை.

சுமார் 90 சதவீதம் வரையிலான எம்.எல்.ஏ.க்கள் சொந்தமாக கார் வைத்துள்ள நிலையில், புதியதாக கார் தர வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

மாநிலத்தின் நிதிச்சுமையை கருத்தில்கொண்டு, 59 தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் கார் வேண்டாமென, தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி ஒருமனதாக முடிவெடுத்துள்ளதாகவும், அதற்கு பதிலாக பொருளாதாரரீதியாக நலிவடைந்தவர்களுக்கு கார் வழங்க வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேற்று பேரவையில் தெரிவித்தார்.

பா.ம.க. மற்றும் த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளித்து வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இதே கருத்தை வலியுறுத்தியுள்ளன. அறிவிப்பு தங்கள் மீதே ஏவுகணையாக பாயுவதை அறிந்த அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, ‘கார் உள்ள த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள், கார் கேட்கமாட்டார்கள்’ என்று சமாளித்தார். அரசியல் கட்சி தலைவர்கள் தரப்பிலும் இதற்கு கண்டனம் எழுந்துள்ளது.

இது அரசை விமர்சிக்காமல் இருப்பதற்காக எம்.எல்.ஏ.க்களுக்கு வழங்கும் லஞ்சமா என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மக்களின் வரிப்பணத்தில் இருந்து ஒரு பைசா கூடத் தொட மாட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது மக்களின் பணத்தில் எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வழங்குவது ஏன் என அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன், கூறியுள்ளார்.

பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சி காரணமாக டெல்டா உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் விவசாயம் அடியோடு படுத்து விட்டது. இதனால் அரசு முழுமையாக பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்; தேர்தல் அறிக்கையில் கூறியபடி ரூ.2,500 மகளிர் உரிமைத்தொகை வழங்க வேண்டும். புறநகர் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவச பயணம் உள்ளிட்ட எண்ணற்ற கோரிக்கைகளைப் பற்றி த.வெ.க. அரசு கவனத்தில் கொள்ளவில்லை. எனவே, மக்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதில் த.வெ.க. அரசு, முதல் அக்கறை காட்ட வேண்டுமென தமிழக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.